**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண். 50/2020**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **11.08.2026** |
| **பெயர்** | **ஸ்டாலின்** |
| **த/பெ** | **கிருஷ்ணன்** |
| **சாட்சி** | **PW2** |
| **வயது** | **50** |
| **ஊர்** | **செம்பியமணலி** |
| **தொழில்** | **மின்சாரத் துறை** |

**விசாரணை தொடங்கும் நேரம் – 03.41. பி.எம்.**

**முதல் விசாரணை–**

1. இந்த வழக்கில் வாதி தரப்பில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மேற்படி இந்த வழக்கில் உள்ள உயிலில் நான் சாட்சியாக கையொப்பமிட்டுள்ளேன். உயிலில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் உயிலை எழுதிய சகுந்தலம்மாளுக்கு முன்னிலையில் தான் நான் சாட்சி கையொப்பமிட்டுள்ளேன். உயிலில் குறிப்பிட்டுள்ள அனைத்து சொத்துக்கள் குறித்த விவரம் எனக்கு தெரியும்.

**குறுக்கு விசாரணை**

1. என் பெயர் ஸ்டாலின் என்பதற்கோ, என் தந்தையின் பெயரை காண்பிப்பதற்கோ அல்லது என் முகவரியை காண்பிப்பதற்கோ நான் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு இந்நீதிமன்றத்தில் நடக்கும் விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் சிவபூசனம் அவரின் வழக்கறிஞரும் கூறியதன் பெயரில் தெரியும்

நானும் செம்பியம்பேடு கிராமத்தில் தான் வசித்து வருகிறேன். என் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள உயிலை என்னிடம் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் எந்த ஆவணமும் காட்டாமல் எதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் அந்த உயிலை சகுந்தலாம்மாள் வாசித்து காண்பித்து நான் அதில் சாட்சி கையொப்பமிட்டுள்ளேன். அந்த உயிலில் இவ்வழக்கில் எத்தனையாவது ஆவணமாக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தெரியாது. அந்த உயிலை நான் படித்துப்பார்த்துள்ளேனா என்றால் படித்துப்பார்த்துள்ளேன். கடைசியாக அந்த உயிலை நான் எப்போது பார்த்தேன் என்றால் சுமார் 1 வருடம் முன்பாக பார்த்துள்ளேன்.

2. மேற்படி உயிலின் நகல் என்னிடம் உள்ளதா என்றால் என்னிடம் இல்லை. சகுந்தலம்மாளை கடைசியாக நான் எப்போது பார்த்தேன் என்றால் 2018–ல் பார்த்தேன். அதன் பிறகு எப்போது பார்த்தேன் என்றால் அதன் பிறகு நான் பார்க்கவில்லை. என்பபடி அந்த உயிலில் யார் பயனாளர் என்றால் சிவபூசனம், மகேஷ் மற்றும் கோபி ஆகிய மூவரும் செம்பியமணலி கிராம மக்களுக்கு வீடு கட்டி கொடுக்க வேண்டும் என்று மூவருக்கும் உயில் எழுதப்பட்டது. உயிலில் குறிப்பிட்டுள்ள கோபி யின் மனைவி தான் மலர்கொடி என்றால் சரிதான். ஜெயபதி என்பவர் யார் என்றால் சிவபூசனம் என்பவரின் அண்ணன். தினேஷ் யார் என்றால் மகேஷின் தம்பி.

3. இந்த வழக்கில் மலர்கொடி, ஜெயபதி மற்றும் தினேஷ் ஆகியோர்களுக்கு சொத்து எப்படி சொந்தம் என்று குறிப்பிட்டுள்ளார்களா என்றால் ஆவணத்தின் மூலம் அவர்களுக்கு சொத்து சொந்தம், நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் பி.டெக் படித்துள்ளேன். கோபி, மலர்கொடிக்கு எழுதி கொடுத்த வா.சா.ஆ10 செட்டில்மெண்ட் பத்திரத்தில் உயிலின் மூலம்  சொத்து கிடைத்து அதனை ஊர் மக்களுக்கு கொடுக்க வேண்டும் என்று எந்த வாசகமும் இல்லை என்றும் தனிப்பட்ட முறையில் பிரிக்கப்படதா சொத்தினை பொறுத்து செட்டில்மெண்ட் எழுதியதாக உள்ளதா என்றால் சரிதான். அதேபோல் சிவபூசனமும் அவரின் தம்பியான ஜெயபதி பெயரில் ஒரு பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால் அது அவரை கேட்டால் தான் தெரியும். நான் உயிலை பொறுத்து மட்டும் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேனே தவிர எனக்கு பிற ஆவணங்கள் குறித்து எதுவும் தெரியாது.

4. மகேஷ் என்பவர் தினேஷ்க்கு தனிப்பட்ட முறையில் தான் செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் யார், யாருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. சிவபூசனம் மற்றும் மகேஷ் ஆகியோர் சகுந்தலம்மாளுக்கு மருத்துவ

செலிவிற்கு ரூ.10,00,000 செலவிட்டார்களா என்றால் தெரியாது. என் பெயர் ஸ்டாலின் அல்ல முசோலினி என்றால் சரியல்ல. பிரதிவாதிகளை எனக்கு தெரியுமா என்றால் பார்த்துள்ளேன். இந்த வழக்கில் சிவபூசனம் சாட்சியம் அளிக்கும்போது நான் நீதிமன்றத்திற்கு வந்தேனா என்றால் இரண்டு முறை வந்துள்ளேன்.

5. யார் அழைத்ததன் பெயரில் நான் நீதிமன்றத்திற்கு வந்தேன் என்றால் ஊர் மக்கள் சிலருடன் சேர்ந்து வந்தேன். சிவபூசனம் மற்றும் பிற நபர்கள் கிரையம் பெற்றார்கள் அதற்கு கிராமத்தார் என்ற முறையில் எவ்வளவு தொகை நான் கொடுத்தேன் என்றால் நான் தொகை எதுவும் கொடுக்கவில்லை. பின்பு மேற்சொன்ன கிரையம் ரத்து செய்யப்பட்டு அதில் உள்ள ரூ. 42,00,000 கிரையத் தொகையில் எனக்கு எவ்வளவு கொடுத்தார்கள் என்றால் எனக்கு எந்த தொகையும் கொடுக்கவில்லை. சிவபூசனம் , மகேஷ் மற்றும் கோபி ஆகியோர்கள் சொத்தினை வாங்கிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எப்போது தெரியும் என்றால் கிரையப்பத்திரம் ரத்து செய்த பிறகு கிராமத்தில் பொதுக்கூட்டத்தில் கூறியதன் பெயரில் தெரியும்.

6. சகுந்தலாம்மாள் இறந்த விவரம் தெரியுமா என்றால்தெரியும். சகுந்தலாம்மாள் எப்போது இறந்தார் என்றால் தேதி எனக்கு தெரியாது 3–4 மாதங்களுக்கு முன்பு கிராம நிர்வாகிகள் கூறியதன் பெயரில் எனக்கு தெரியும். எல்லா விவரத்தையும் கிராமநிர்வாகிகள் தான் எனக்கு கூறுகிறார்களா என்றால் ஆம். நான் கூறும் டிரஸ்டின் பெயர் என்ன என்றால் கிராம சேவா சங்கம். அதில் நான் என்ன பொறுப்பில் உள்ளேன் என்றால் எந்த பொறுப்பிலும் இல்லை. எதனால் கிரையம் ரத்து செய்யப்பட்டது என்றால் சகுந்தலாம்மாள் உயிருடன் இருந்ததாக அனுமானித்து கிரையம் செய்யப்பட்டது. ஆனால் வாதிகள் விவரம் தெரியாமல் வாழ்வு சான்றிதழை வைத்துக்கொண்டு கிரையம் செய்துவிட்டார்கள் அதனால் பிற்காலத்தில் விவரம் தெரிந்த பிறகு மேற்சொன்ன கிரையப்பத்திரமானது ரத்து செய்யப்பட்டுவிட்டது.

7. பி.சா.ஆ –2 ன் பின்னினைப்பாக உள்ள வாழ்வு சான்றிதழில் மருத்துவர் கண்ணன் என்பவரின் முன்னிலையில் சகுந்தலாம்மாள் கையொப்பமிட்டுள்ளார் அதனால் தான் மேற்சொன்ன கிரையப்பத்திரம் ரத்து செய்யப்பட்டுவிட்டதா என்றால் ரத்து செய்யப்பட்டுவிட்டதாக ஊர் மக்கள் கூறுகிறாரகள். வா.சா.ஆ 7–ல் சகுந்லாம்மாளின் இறப்பு சான்றிதழில் அவர் எந்த தேதியில் இறந்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் 09.01.2019. அதேபோல் பி.சா.ஆ 2ல் வாழ்வு சான்றிதழில் 07.02.2019 மருத்துவர் முன்னிலையில் சகுந்தலாம்மாள் கையொப்பமிட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. அப்படி இருக்கையில் பி.சா.ஆ –3 வழக்கு சொத்தின் ஸ்வாதீனத்தை ஒப்படைக்காத காரணத்தினால் கிரையப்பத்திரம் ரத்து செய்வதாக குறிப்பிட்டு இருந்தால் அது தவறு என்றால் பி.சா.ஆ3 குறித்து எனக்கு தெரியாது உயில் குறித்து மட்டும் தான் எனக்கு தெரியும். வாதிகளுக்கு பவ்வியப்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே நான் ஸ்டாலின் அல்ல என்றும் அதனால் தான் இவ்வழக்கில் என்னுடைய ஆதார் அட்டையை சமர்பிக்க வில்லை என்றும் மேற்சொன்ன உயிலை சமர்பிக்கவில்லை என்றும் அதனால் என்னுடைய சாட்சியமானது நீதிமன்றத்தில் நிராகரிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் ஆள்மாறாட்டம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 04.33.p.m.**